# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2086/32 - 2018 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.30

**2086/32 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ............. இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை பற்றிய திருத்த சாசனம்*

இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்ற வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ................ இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபை திருத்த சாசனம் இன்றைய திகதி தொடக்கம் முப்பது நாட்கள் கடந்த பின்பு வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் அடங்கியுள்ள சட்டத்திட்டங்கள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவது விடயங்கள் இருந்தால் அதனை அத் திகதிக்கு முன் என்னிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

டீ.ஜீ.பீ.எம். தர்மசிரி தசநாயக,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி
மற்றும் மாகாண நிருவாக, பொருளாதார அபிவிருத்தி, சுற்றாடல்
அலுவல்கள், நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றுலா நடவடிக்கை, அமைச்சர்.

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சும்
நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை,
நீதியும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி
மற்றும் மாகாண நிருவாக, பொருளாதார அபிவிருத்தி,
சுற்றாடல் அலுவல்கள், நீர் விநியோகம் மற்றும்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை, அமைச்சு
1 ஆம் மாடி,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி
குருநாகல்.


1A - PG4193 - 42 (2018/08)

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**வடமேல் மாகாண மாகாண சபை**

*2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கத்திற்கான திருத்த சாசனத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தினை திருத்தியமைப்பதற்கான சாசனமாகும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

சுருக்கப் பெயர்.

1. இச் சாசனம் 2018 ஆம் ஆண்டின் ................ இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் (திருத்த) சாசனம் என்று அடையாளம் காணப்படுகின்றது.

2. இங்கு இதன் பின்பு பிரதான சாசனம் என்று குறிப்பிடப்படுகின்ற 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கத்திற்கான திருத்த சாசனத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சுற்றாடல் சாசனத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் அகற்றப்படுவதுடன், அதற்காக கீழ்க் காணப்படும் உறுப்புரை பதிலீடு செய்யப்படும்.

பிரதான சாசனத்தில் 3 ஆம் பிரிவினை திருத்தி அமைத்தல்.

3.1 விடயப் பொறுப்புடைய அமைச்சரை விசாரித்து வடமேல் மாகாணத்தில் முதலமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 07 பேர்களை கொண்ட மாகாண அதிகார சபை அமைதல் வேண்டும்.

(அ) இதில் ஒருவர் வடமேல் மாகாண சபையில் பிரதம செயலாளர் அல்லது அப்பணிப் பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தராதல் வேண்டும்.

(ஆ) இதில் ஒருவர் வடமேல் மாகாண சபையில் முதலமைச்சின் செயலாளர் அல்லது அப்பணிப் பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தராதல் வேண்டும்.

(இ) இதில் ஒருவர் வடமேல் மாகாண சபையில் உள்ளூராட்சி ஆணையாரள் அல்லது அப் பணிப்பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தராதல் வேண்டும்.

(ஈ) இதில் ஒருவர் சுற்றாடல் விடயம் பற்றிய போதியளவிலான விசேட நிபுணத்துவமும் தகைமையுடைய வராதல் வேண்டும்.

(உ) இதில் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவம் பற்றிய பொருத்தமான நிர்வாக திறமையும் அது பற்றிய அனுபவமுள்ள அல்லது சுற்றாடல் பாதுகாப்பிற்காக செயற்படுகின்ற ஏதாவதொரு அமைப்பில் பிரபல செயற்பாட்டு நபராதல் வேண்டும் இன்னும்,

(ஊ) இதில் ஒருவர் கைத்தொழில் விடயம் பற்றிய போதியளவிலான விசேட நிபுணத்துவமும் தகைமையுடையவராதல் வேண்டும். இன்னும்,

(எ) இதில் ஒருவர் இலங்கை அரசின் பல்கலைகழகத்தில் விஞ்ஞான பாடம் சம்பந்தமாக பேராசிரியர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளராதல் வேண்டும்.

3.2 வடமேல் மாகாணத்தில் பிரதம செயலாளர் அல்லது அப் பணிப்பொறுப்பினை வகிக்கும் உத்தியோகத்தர் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையில் தலைவராதல் வேண்டும்.

3.3 மாகாண அதிகார சபையில் தலைவரினால் அதன் செயலாளராக உரிய காலத்திற்கு மாகாண அதிகார சபையின் பணிப்பாளராக நியமித்தல் வேண்டும்.

3.4 அதிகார சபையில் கூட்டத்தின் போது குறைந்த பட்சம் உறுப்பினர்கள் மூவரை கொண்டு அமைதல் வேண்டும்.

3. *2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கத்திற்கான திருத்த சாசனத்தில் 10 ஆம் பிரிவினை இத்துடன் அகற்றுவதுடன், பிரதான சாசனத்தில் 62 ஆம் பிரிவிற்கு பின்பு கீழ்க் காணப்படும் 63 ஆம் பிரிவாக உட்படுத்தப்படும்.*

*63. இக் கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம், தமிழ் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக் கொள்ளப்படும்.*

*பொருத்தப் பாடின்மை தோன்றுமாயின் சிங்கள மொழியே ஏற்றுக் கொள்ளப் படும்.*

*09-363*